வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनारपत्तनन्यास

# V.O.CHIDAMBARANAR PORT TRUST

(MINISTRY OF SHIPPING, GOVERNMENT OF INDIA)

ADMINISTRATIVE OFFICE, HARBOUR ESTATE, TUTICORIN 628 004, TAMIL NADU

ISO 9001:2015,
ISO 14001: 2015,
OHSAS 18001:2007&
ISPS COMPLIANT PORT

SAGARMALA
PORT-LED PROSPERITY

Press Release No.28 Dated :01.11.2018

## Celebration of Vigilance Awareness Week -2018 in V.O.Chidambaranar Port

Vigilance Awareness Week – 2018 commenced at V.O.Chidambaranar Port Trust on 29th November, 2018.

Shri.U.Rajendran, Traffic Manager, V.O.Chidambaranar Port Trust inaugurated the Vigilance Awareness Week 2018 by administering the Vigilance Awareness Pledge to all Officers and Staff in the presence of Shri P. Kathirvel, Trustee, V.O.Chidambaranar Port at the Administrative Office of the Port.Subsequently, Smt. S. Shanthi, Financial Advisor and Chief Accounts Officer, V.O.Chidambaranar Port Trust and Dr. Joseph Sunder, Deputy Chief Medical Officer, V.O.Chidambaranar Port Trust administered the Vigilance Pledge in Hindi and Tamil respectively.

As a part of the week long programme, on 30.10.2018, Essay Writing Competition was held for School Children of Tuticorin, in which around 46 students actively to part in the competition. In addition, Essay writing competition were also conducted for the employee of the Port, CISF and RAO Unit of the Port.

On 31.10.2018 Awareness Seminar on the theme 'Eradicate Corruption – Build a New India' was organized for the Officers and Employees of the Port at the Administrative Office.

Elocution Competition was organized for School Students and College Students on 01.11.2018 in which around 35 students and 25 College students took part with Zeal and enthusiasm.

The Port has proposed to organize a special address by Shri S. ManickamAthappa, an Industrialist from Coimbatore, on Eradicating corruption, for School Students at Port Community Hall on 02.11.2018. It has also been proposed to conductSlogan writing competition for employee of the Port, CISF and RAO Unit on 02.11.2018 and Medical Camp for the residents of Labour Colony on 03.11.2018.

Vigilance Awareness is being observed by all the Government organizations in pursuit of the vision of the Government of India to make a New India by the year 2022, which is the 75th anniversary of our Independence, the Central Vigilance Commission, as the apex integrity institution of the Country, endeavours to promote integrity, transparency and accountability in Public life.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनारपत्तनन्यास
V.O.CHIDAMBARANAR PORT TRUST
(MINISTRY OF SHIPPING, GOVERNMENT OF INDIA)
ADMINISTRATIVE OFFICE, HARBOUR ESTATE, TUTICORIN 628 004, TAMIL NADU

ISO 9001:2015,
ISO 14001: 2015,
OHSAS 18001:2007&
ISPS COMPLIANT PORT


மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண்:28 தேதி: 01.11.2018

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு வாரவிழா- 2018 கொண்டாட்டங்கள்**

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு வாரவிழா, வெகு விமர்சையாக நவம்பர் 29-ஆம் நாள் துவங்கப்பட்டது.

இத்துவக்க விழாவினை திரு. யு. ராஜேந்திரன். போக்குவரத்து மேலாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் அவர்கள் 2018 ஆண்டிற்கான கண்காணிப்பு வார உறுதியினை முன்மொழிய, திரு.பி.கதிர்வேல், துறைமுக சபை உறுப்பினர், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் அவர்கள் முன்னிலையில், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் உறுதிமொழியினை எடுத்து கொண்டனர். திருமதி எஸ்.சாந்தி, நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அதிகாரி, வ.உ.சிதம்பரனார் பொறுப்புக் கழகம் அவர்கள் இந்தி மொழியிலும் மற்றும் டாக்டர். ஜோசப் சுந்தர், துணை தலைமை மருத்துவ அதிகாரி, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் அவர்கள் தமிழ் மொழியிலும் முன்மொழிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் உறுதிமொழியினை எடுத்துகொண்டனர்.

இவ்வார விழாவில் ஒரு பகுதியாக, 30.10.2018 அன்று தூத்துக்குடியிலுள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்கு கட்டுரை போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் 46 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். மேலும் துறைமுக ஊழியர்கள், மத்திய தொழில் பாதுகாப்புப் படை மற்றும் துறைமுக தணிக்கை பிரிவு ஊழியர்களுக்கும் கட்டுரை போட்டி நடத்தப்பட்டது..

31.10.2018 அன்று துறைமுக நிர்வாக அலுவலகத்தில் வைத்து துறைமுக ஊழியர்களுக்கு ஊழலை ஒழித்து புதிய இந்தியா உருவாக்க வேண்டும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

இன்று 01.11.2018 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்குகான பேச்சிப் போட்டி நடத்தப்படடது. இப்போட்டியில் 35 பள்ளி மாணவ மாணவிகளும் 25 கல்லூரி மாணவ மாணவிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

நாளை 02.11.2018 அன்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஊழல் ஒழிப்பு என்ற தலைப்பில் திரு எஸ். மாணிக்கஅத்தப்பா, தொழிலதிபர், கோயம்பத்தூர் அவர்களின் சிறப்புகருத்தரங்கு துறைமுக கூட்டரங்கில் வைத்து நடைபெற உள்ளது. துறைமுக ஊழியர்கள், மத்திய தொழில் பாதுகாப்புப் படைமற்றும் துறைமுக தணிக்கை பிரிவு ஊழியர்களுக்கும் சுலோகன் எழுதும் போட்டி நடைபெற உள்ளது. மேலும் 03.11.2018 அன்று துறைமுக குடியிருப்பு பகுதியின் அருகிலுள்ள லேபர் காலனி குடியிருப்பு பகுதியில் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

2022ம் ஆண்டில் புதிய இந்தியாவை உருவாக்கும் தொலை நோக்கு பார்வையுடன் செயல்பட்டு வரும் இந்திய அரசு, மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் மார்க்கமாக, பொதுவாழ்வில் நேர்மை, வெளிப்படை தன்மை மற்றும் பொறுப்புடமை ஆகிய தலையாய பண்புகளை நிலை நிறுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகிறது.

மேற் சொன்ன தகவலை வ.உ. சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி


CHIDAMBARANAR PORT TRUST
VIGILANCE AWARENE
WEEK
29th Oct
er - 03rd No
on 29th